1996 பிப்ரவரி 20]

குறைந்த அளவில் மாணவர்கள் இருப்பதாலும், மிக அருகாமையில் 4 கிலோ மீட்டர் தூரத்தில் செம்புளிச்சான்பட்டியில் ஒரு நடுநிலைப்பள்ளி இயங்கி வருவதாலும் இந்த உறைவிடப் பள்ளியை நடுநிலைப்பள்ளியாக உயர்த்துவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என திருச்சி மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் தெரிவித்துள்ளார்கள்.

திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிணத்தூருக்கும் செம்புளிச்சான்பட்டிக்கும் சுமார் பத்து கிலோமீட்டர் தூரம் உள்ளது. அதுவும் மலைப்பாதையாக இருப்பதால் அங்கு நடந்து சென்று படிப்பது இயலாத காரியமாக இருக்கிறது. மீண்டும் பரிசீலனை செய்து அங்கு நடுநிலைப்பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர் காலத்தில் போதுமான அளவிற்கு மாணவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்து வருமானால் பரிசீலிக்கலாம் என தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 76, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

76—

தெரு விளக்கு அமைத்தல்

* ***46379*** திருமதி ப. சரஸ்வதி:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலைத் தொகுதி, மோகனூர் ஒன்றியம், பரமத்தி ஒன்றியம், கபிலர்மலை ஒன்றியம் ஆகிய மூன்று ஒன்றியங்களில் உள்ள ஆதிதிராவிடர்கள் குடியிருப்புகளில் எத்தனை குடியிருப்புகளுக்கு தெரு விளக்கு அமைக்கக்கோரி முறையீடுகள் வந்துள்ளன?

(ஆ) அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கபிலர் மலைத் தொகுதியில் மோகனூர் ஒன்றியத்தில் நான்கு ஆதி திராவிட குடியிருப்புகளுக்கு 20 மின் விளக்குகளும் பரமத்தி ஒன்றியத்தில் இரண்டு குடியிருப்புகளுக்கு 9 மின் விளக்குகளும், கபிலர் மலை ஒன்றியத்தில் ஒரு குடியிருப்புக்கு 5 மின் விளக்குகளும் பொருத்தப்பட்டு மின் வசதி செய்யப்பட்டுள்ளது.

திருமதி ''. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கபிலர் மலைத் தொகுதி உள்ளடக்கிய பரமத்தி வேலூர் வட்டத்தைச் சேலம் மாவட்டத்தின் வறட்சிப் பகுதியாக அறிவித்த எங்களுடைய தாய், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், உலக அரங்கிலே ஒப்பற்ற பெண்மணியாம் எங்கள் அன்னையை, தொட்டில் குழந்தைத் திட்டம் தந்து பெண் குழந்தையைப் பாதுகாத்து, பெண் சமுதாயத்தில் வாழ்க்கையிலே வீசிய புதுமைப் பெண்ணாகிய தங்களின் தங்க மலர்ப் பாதத்திற்கு எங்களின் கபிலர் மலைத் தொகுதியின் சார்பாக எங்கள் நன்றியைக் காணிக்கையாக ஆக்குகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) கபிலர் மலைத் தொகுதி பரமத்தி வேலூர் தாலூக்கா உள்ளடக்கியது. மீதிப்பட்டது ஒரு மூன்று ஊராட்சிதான். மற்றவை அனைத்தும் பரமத்தி வேலூர் வட்டம்தான். அந்த வட்டம், காவிரியாறு பாய்ந்து வந்தாலும் மூன்றில் இரண்டு பகுதி மிகவும் கடுமையான வறட்சியாக இருந்ததை அன்னை அவர்கள் ஆதரவோடு எங்களுக்குக் காட்டிய கருணைக்குக் கோடானுகோடி நன்றியைத் திருவடியில் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். அப்பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கின்றார்கள். அமைச்சரவர்கள் சொன்ன பதிலானது அப்படிப்பட்ட நிலையில் இல்லை என்பதாக நான் அறிகிறேன். அருள்கூர்ந்து அனைத்து . . . .

முற்பகல் 11.00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது, சுருக்கமாகக் கேள்வி மட்டும் கேளுங்கள்.

திருமதி ப. சரஸ்வதி: அனைத்து தொகுப்பு வீடுகளும் ஊரைவிட்டு தள்ளித் தள்ளி கட்டியிருக்கிறோம், நிலம் கிடைக்காத காரணத்தால் நிலம் கொடுக்கின்ற பகுதியை எடுத்து தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. அந்தத் தொகுப்பு வீடுகளுக்கு மின் கம்பங்கள் இணைக்க இயலவில்லையென்று சொல்லி, முன்னுரிமை இருந்தும் இன்று மின் இணைப்பு பெற இயலாத நிலையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட

1996 பிப்ரவரி 20]

தொகுப்பு வீடுகள் கட்டப்பட்ட காலனிகள் பலவற்றில் மின் கம்பங்கள் இல்லாத காரணத்தால் ஒரு விளக்குத் திட்டத்தையும் அமல்படுத்த முடியாத நிலையிருக்கிறது. குறிப்பாக கபிலர்மலை தொகுதியில் பரமத்தி வேலூர் வட்டம் படமுடிபாளையம் கிராமமும், நாமக்கல் தாலூக்காவிலே தோலூர் கிராமமும், மேல் தோலூர் கிராமமும், நாமக்கல் தாலூக்கா ராசம்பாளையம் அருந்ததியர் காலனி, இப்படிப்பட்ட காலனிகள் ஊரைவிட்டு 2 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்றன. இருண்ட பகுதியாக இருப்பதால், கட்டி முடிக்கப்பட்டும் குடிபெயராமல் இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து சம்பந்தப்பட்ட துறையிடம் தொடர்பு கொண்டு ஆய்வு செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் கூறிய பதில் சரியில்லையென்று சட்டமன்ற உறுப்பினர் சொன்னார். அவர் கேட்ட கேள்வியே குடியிருப்புகளுக்குத் தெருவிளக்கு வேண்டுமென்ற கேள்வி. அதில் டேட் வாரியாக நான் சொல்ல இருக்கிறேன். கபிலர்மலை தொகுதி மோகனூர் ஒன்றியம், பரமத்தி ஒன்றியம், கபிலர்மலை ஒன்றியம் ஆகிய மூன்று ஒன்றியங்களிலுள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குத் தெருவிளக்குகள் அமைக்க வேண்டி விண்ணப்பித்துள்ள ஆதிதிராவிடர் காலனிகள் பெயர்களை இங்கே சொல்ல இருக்கிறேன். ஒன்றியத்தின் பெயர், மோகனூர் ஒன்றியத்தில் சின்னபெத்தாம்பட்டி அங்கே மின் விளக்குக் கம்பங்கள் அமைத்தது 5-4-94 தோனார் விளக்குகள் எண்ணிக்கை 6, 5-4-94, செங்கம்பள்ளி விளக்குகள் எண்ணிக்கை 5, 29-3-94...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒன்றியத்திலுள்ள ஒவ்வொரு ஊராகச் சொன்னால், ஒரு கேள்வியின் பதிலுக்கு நேரம் சரியாகப் போகும். ஒட்டுமொத்தமாக ஒன்றியத்திற்கு இந்தத் தேதிக்குள் முடிக்கப்படும் என்று சொன்னால் போதும்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து, அதாவது மேற்கண்ட 3 ஒன்றியங்களில் ஆதிதிராவிடர் காலனிகளுக்கு தெருவிளக்குகள் அமைக்க வேண்டி வந்த விண்ணப்பங்கள் அத்தனையுமே பரிசீலித்து நடவடிக்கை எடுத்திருக்கிறோம். மேலும் மனுக்கள் வந்தால் நிச்சயமாக இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசாங்கம் ஆதிதிராவிடர் மக்களுடைய அடிப்படை வசதிகளை, அனைத்தையும் செய்து கொடுக்கின்ற புரட்சித் தலைவி ஆட்சியில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். சட்டமன்ற உறுப்பினர்

விவரங்களை சரியாக சேகரித்துக் கொண்டு கேள்விகளை கேட்க வேண்டும். எடுத்த எடுப்பிலேயே அமைச்சர் சொன்ன குறிப்பு தவறானது என்று சொன்னால், இந்த அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்டிருக்கின்ற நம்பிக்கை, குறிப்பாக ஆதிதிராவிடர் மக்களுக்கு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி செய்துகொண்டிருக்கின்ற அத்தனையும் புள்ளிவிவரங்களோடு சிறப்புத் தனித் திட்டத்தின்கீழ் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதற்காகவே உயர்மட்டக் குழு அமைத்து அவ்வப்போது ஆய்வு செய்து இந்தப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. அத்தனையும் நம்முடைய ஆட்சியில்தான் தேதிவாரியாக செய்து கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருமதி. ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தவறாக கூறினார் என்று சொல்லவில்லை, போதுமானதாக இல்லையென்றுதான் சொன்னேன். அதோடு என்னுடைய பரமத்தி வேலூர் தொகுதியிலே நானே என்னுடைய கைப்பட மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு கொடுத்த விண்ணப்பங்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் உங்களுடைய அந்த ஒன்றியங்களிலேயிருந்து வந்த அத்தனை மனுக்களுக்கும் கொடுத்துவிட்டோம் என்கிறார். இன்றைக்குப் போதுமானதாக இல்லையென்றால் எப்படி? நீங்கள் மனு கொடுத்தது அத்தனைக்கும் கொடுத்துவிட்டோம் என்கிறார்.

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் நிலுவையில் இருக்கின்ற காரணத்தினால்தான் மேற்கண்ட இந்த 3 காலனிகளுக்கும் குறிப்பாக படமுடிபாளையம் ஆதிதிராவிடர் காலனி, நாமக்கல் வட்டம் தோலூர் கிராம் மேல்தோலூர் அருந்ததியர் காலனி, ராசம்பாளையம் காலனி, இந்த 3-க்கும் நாங்கள் கொடுத்த மனுக்கள் நிலுவையில் இருப்பதால்தான் அங்கே குடிசை இல்லாமல் ஒரு வருடம் ஆகிவிட்டது. அதற்காகத்தான் இந்தக் கேள்வியை போட்டேன். அருள்கூர்ந்து தவறாக இருப்பின் மன்னித்துக் கொண்டு இந்த காலனிகளுக்கு உடனடியாக மின் இணைப்பு கொடுக்க..

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் கொடுப்பது பரிந்துரைதான். அந்தக் கிராமத்தைச் சார்ந்த இன்டிவிஜுவல் கொடுத்த மனுக்களைத்தான் அரசு அதிகாரிகள் சட்ட விதிமுறைகளின்படி பரிசீலிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1996 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 77, திரு.. வி. பி. ஆர். ரமேஷ், மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

77—

மீனவர்களுக்கு வீடுகள் கொடுத்தல்

* ***73342*** திரு. வி. பி. ஆர். ரமேஷ்:

மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் வாழும் மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அரசு ஒவ்வொரு ஆண்டும் கடலோரப் பகுதியில் வாழும் மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டி வழங்கி வருகிறது. அதன் அடிப்படையில் *1992-93, 1993-94, 1994-95* மற்றும் *1995-96*-ஆம் ஆண்டுகளில் தூத்துக்குடி மண்டலத்துக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

முற்பகல் *11-05*

திரு. வி. பி. ஆர். ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியிலுள்ள கடற்கரையில் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட கிறித்துவ மீனவர்கள் குடிசைகளில் வசித்து வருகிறார்கள். கடந்த புயலால் அனைத்துக் குடிசைகளும் நாசப்படுத்தப்பட்டாலும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எந்த முதல்வரும் செய்யாத அளவிற்கு நேரிலேயே குடிசைப் பகுதிகளுக்கு வந்து ஆறுதல் கூறி, குடிசைகள் கட்டிக் கொடுக்க உடனே உதவி செய்வதாகவும் கூறினார்கள். சமீபத்தில் கடற்கரையில் குடிசைகள் தீப்பிடித்துபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரிலே சென்று ஆறுதல் கூறினார்கள்.